***IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.***

***DATE : 08.10.2025***

Case No. : OS.43/2022

Deposition of Witness for Plaintiff : PW.2

Name : சுரேஷ்குமார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of October 2025

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1). நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI முடித்துள்ளேன். நான் சொன்னதன் அடிப்படையில் தான் பிரமாண பத்திரிக்கையானது தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள நிலம் அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். அந்த நிலத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 1357 சதுரடி ஆகும். அதன் சர்வே எண் தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவின் பெயர் மணி ஆகும். வாதிகள் எனது சித்தப்பா பழனிசாமியின் மக்கள் ஆவார்கள் என்றால் சரிதான். எனது சித்தப்பா கேரளாவில் உள்ளார். எனது சித்தி ஏற்காடு நாகலூரில் 1-வது வாதியுடன் வசித்து வருகிறார். எனது தந்தையின் அம்மாவான சின்னபொன்னு எப்போது இறந்தார் என்றால் 2017-ம் வருடம் இறந்தார்.

2). எனது பாட்டி எங்களுக்கும், வாதிகளுக்கும் சொத்தினை செட்டில்மெண்ட் செய்தது பற்றிய விவரங்கள் தெரியும், செட்டில்மெண்ட் பத்திரத்தினை பார்த்துள்ளேன். எங்களுக்கு சொத்தினை செட்டில்மெண்ட் செய்து கொடுத்த பத்திரத்தின் மதிப்பு என்னவென்றால் ரூ.100/- மதிப்பு ஆகும். வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின் மதிப்பும் ரூ.100/- ஆகும். ரூ.100/- மதிப்புள்ள பத்திரத்தினை யார் வாங்கிவந்தார்கள் என்றால் எனது பக்கத்து வீட்டுக்காரர் ரவி என்பவர் வாங்கிவந்தார். மேற்படி சங்கதியை பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி எந்த தேதியில் எங்களுக்கு செட்டில்மெண்ட் பத்திரத்தினை எழுதிக்கொடுத்தார்கள் என்றால் தேதி, மாதம் நினைவில் இல்லை வருடம் 2016 ஆகும். அன்றைய தினமே

வாதிகளுக்கும், எங்களுக்கும் செட்டில்மெண்ட் பத்திரத்தினை எழுதிக்கொடுத்தார். செட்டில்மெண்ட் பத்திரம் எங்கு வைத்து எழுதிக்கொடுத்தார் என்றால் சேலம் அஸ்தம்பட்டியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதிக்கொடுத்தார். மேற்படி பத்திரத்தில் சாட்சியாக யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் ரவி, பாலு மற்றும் இருவர் கையெழுத்து செய்திருந்தார்கள்.

3). ரவி மற்றும் பாலு எனது ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பத்திரம் பதிவு அலுவலகத்தை தவிர வேறு எங்கும் பத்திரத்தினை எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பத்திரம் பதிவு செய்யப்பட்ட தினத்தன்று ஒன்றாம் வாதி மற்றும் அவரது கணவர் மற்றும் நான் பத்திரபதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். பத்திரம் என்ன தேதியில் வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு செட்டில்மெண்ட் பத்திரங்களும் ஒரே தேதியில் வாங்கினார்களா என்றால் சரிதான். 1-ம் வாதி திருமணமாகி 15 வருடங்கள் ஆகியிருக்கும் என்றால் சரிதான். 1-ம் வாதிக்கு திருமணம் நடந்ததை பின்னிட்டு எனது சித்தி பழனியம்மாள் அவருடனேயே நாகலூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2-ம் வாதி ஈரோட்டில் பணிபுரிந்து கொண்டு அங்கேயே கடந்த 10 வருடமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிகள் மற்றும் அவர்களின் தாயாரோ வசித்து வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

4). என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆனது 17.11.2015-ம் தேதியன்று வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.50/- என்றால் சரிதான். செட்டில்மெண்ட் செய்த தேதி 27.01.2016-ம் தேதி என்றால் சரிதான். 19.02.2016-ம் தேதியன்று நோட்டரி வழக்கறிஞர் சான்றொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 19.02.2016-ம் தேதியன்று தான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10 எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஆவணமானது வாங்கப்பட்ட தேதி 17.12.2015-ம் தேதி என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.20/- என்றால் சரிதான். வா.சா.ஆ.10 மற்றும்

வா.சா.ஆ.1–ல் சாட்சிகளாக பாலகிருஷ்ணன் மற்றும் அர்ஜீனன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது K.P.தீபா, முத்திரை தாள் விற்பனையாளர், 75/1 கம்பர் தெரு, சேலம் என்ற இடத்தில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.10– ஆவணமானது P.சுபத்ரா, முத்திரை தாள் விற்பனையாளர், நீதிமன்ற வளாகம், சேலம் என்றால் சரிதான்.

5). எங்களுக்கு எனது பாட்டி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலுள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.10–ல் உள்ள செக்குபந்தி விவரங்களில் சர்வே எண். 7/7A1B1 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் 675 சதுரடி மனை நிலமும், இதில் சுமார் 40 வருடங்களுக்கு முன் மங்களூர் ஓடு போட்டு கட்டப்பட்ட வீடு ஒன்னும், அதனை சேர்ந்த கதவு, நிலவு, ஜன்னல், கட்டுக்கோப்பு கூரைகளும், தலகடை, புலகடை சகிதமும் சேர்த்து தான் இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் பாத்தியப்பட்ட செத்தாகும், வீட்டின் கதவு எண். 29/42, வரி விதிப்பு எண். 618 என்பதாக உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தற்போதைய கதவு எண் என்னவென்றால் 2/205 ஆகும். 2/205 கதவு எண் கொண்ட வீட்டில் தான் தற்போது குடியிருந்து வருகின்றோம் என்றால் சரிதான், அதன் பழைய கதவு எண். 29/42 என்றால் சரிதான். எனது பாட்டி வாதிகளுக்கு கொடுத்ததாக சொல்லப்படும் வீட்டின் கதவு எண். 2/206 ஆகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமானது 1–ம் வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான், அதில் கதவு எண்.6/24 என்றால் சரிதான். தாவா சொத்தின் கதவு எண்ணானது 2/206 ஆக மாறியுள்ளதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6). வா.சா.ஆ.10 ஆவணத்தில் கைரேகை தெளிவாக தெரியவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனது பாட்டி கைரேகையினை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து செய்தார். சார்பதிவாளர் அலுவலகம் என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரைய தேதியாக 27.01.2016 என்றும், நோட்டரி வழக்கறிஞரின்

கையொப்பமானது 19.02.2016 என்று பெறப்பட்டுள்ளது என்றும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10–ல் நோட்டரி வழக்கறிஞர் 27.01.2016–ம் தேதியன்று கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் எங்களுக்கு எனது பாட்டியால் கொடுக்கப்பட்ட சொத்து எங்களது பாட்டிக்கோ அல்லது எனது தாத்தா சித்தனுக்கோ பாத்தியப்பட்ட சொத்து என்பதனை நிரூபணம் செய்யும் விதமாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2025.10.08 12:50:32 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.